மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

முன்னிலை : - **திருமதி.A. சீதாலெட்சுமி**, M.A.,B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், நீடாமங்கலம்

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி (முழு கூடுதல் பொறுப்பு)

2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

திருவள்ளுவராண்டு 2054 ஸ்ரீ சோபகிருது வருடம் பங்குனித்திங்கள் 30 ஆம் நாள்

E.A.No.15/2023 in E.A.No.17/22 and EA.No.18/2022

in

EP.No. 17/2019 in OS 109/2014

1. கஜேந்திரன்(இறந்தார்)

2.கவிதா(அவருக்காக அவரது பவர் ஏஜெண்ட்

ருக்மணி மூலமாக

3. மைனர் ஆதித்ன்

4.மைனர் அகிலன்

5.ருக்மணி

(3,4 மைனர்களுக்காக அவரது கார்டியனும்,

பாதுகாவலருமான 5 ம்

மனுதாரர் ருக்மணி மூலமாக).

.. .மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/

தீர்ப்புகடனாளிகள்

// **எதிர்**//

கோவிந்தராஜ்

........எதிர்மனுதாரர்/மனுதாரர்/தீர்ப்புபெற்றவர்

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.ஜெயபால் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.விஜயன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

<u>**உத்தரவு**</u>

இம்மனுவானது கடந்த 23.06.2022ம் தேதியன்று மனுதாரர்கள் ஆஜராகாத காரணத்தினால் மனுதாரர்களுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்து (Exparte setaside)உத்தரவிட்டு அசல் நிறைவேற்று மனுவினை மேல் நடத்த அனுமதியளித்து உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 21 விதி 106 மற்றும் பிரிவு 151-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>**2.மனுவின் சுருக்கம் :-**</u>

இம்மனுவின் 5ம் மனுதாரர் அசல் நிறைவேற்று மனுவில் இறந்த கஜேந்திரனின் தாயார் ஆவார். எதிர்மனுதாரர்/ மனுதாரரால் இறந்த மனுதாரரின் மகன் கஜேந்திரனுக்கு எதிராக மனு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருக்கும்போது, கஜேந்திரன் கடந்த 06.08.2019ம் தேதியன்று இறந்துவிட்டதால், அவருக்கு கஜேந்திரனின் மனைவி கவிதா, இளவர் குழந்தைகள் மற்றும் மனுதாரர் சட்டப்படியான வாரிசுகள் ஆவார்கள். கஜேந்திரனின் மனைவி கவிதா வேலை நிமித்தமாக சிங்கப்பூர் நாட்டிற்கு சென்றபோது, நீதிமன்ற வழக்கைப் பொறுத்து மேல் நடத்துவதற்கு மனுதாரருக்கு கடந்த 15.04.2022ம் தேதியன்று பொது அதிகார ஆவணத்தை எழுதிக்கொடுதத்துள்ளார். இந்நிலையில் கஜேந்திரன் இறப்பிற்கு பிறகு

அவரது வாரிசுகளான மனுதாரர்களுக்கு கடந்த 23.06.2022 ம் தேதியன்று ஆஜராகும்படி நோட்டீஸ் அனுப்பப்பட்டிருந்தது. மேற்படி அன்றைய தினத்தில் உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் நீதிமன்றத்தில் முன்னிலையாக இயலவில்லை. வழக்கறிஞரை அணுகி விபரம் கேட்டபோது கடந்த 23.06.2022 ம் தேதியன்று மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு ஏற்பட்ட விபரம் தெரியவந்துள்ளதால் அதனை ரத்து செய்து இம்மனுவினை அனுமதிக்கவேண்டும் என்று இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :-**

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவானது நிலைநிற்கத்தக்கதல்ல. அசல் நிறைவேற்று மனுவினை காலதாமதப்படுத்த வேண்டும் என்றும் இழுத்தடிக்கவேண்டும் என்றும் எதிர்மனுதாரருக்கு கஷ்ட நஷ்டத்தை ஏற்படுத்தவேண்டும் என்ற எண்ணத்தில் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுவில் சொல்லப்பட்டுள்ள விபரங்களை நிரூபணம் செய்வதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. மனுதாரர் அசல் வழக்கில் மனுதாரருக்கு எதிராக நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்யக்கோரி மனுக்கொடுக்காமல் நிறைவேற்று அசல் மனுவில் ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்யக்கோரி மனு கொடுக்கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4. இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை ஆகும்.**

**1.** இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. மனு, அபிடவிட், எதிருரை,

வழக்காவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது.

**2.** இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**3.** மனுவினை பரிசீலிக்கும்போது அசல் வழக்கானது கஜேந்திரனுக்கு எதிராக கடந்த 16.04.2018 ம் தேதியன்று ஒருதலைப்பட்ச தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டு, பின்னர் நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருக்கும்போது கடந்த 06.08.2019 ம் தேதியன்று கஜேந்திரன் இறந்துவிட்டார் என்றும், அவரது வாரிசுகளான அவரது மனைவி, இளவர் குழந்தைகள், தாயார் ஆகியோரை வாரிசுகளாக சேர்க்க வேண்டி எதிர்மனுதாரர் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு கடந்த 23.06.2022 ம் தேதியன்று நீதிமன்றத்தில் முன்னிலையாக வேண்டும் என்று நோட்டீஸ் அனுப்பப்பட்டிருந்ததாகவும், 5 ம் மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

மேலும், கஜேந்திரன் மனைவி சிங்கப்பூர் நாட்டிற்கு செல்லும்போது வழக்கை நடத்துவதற்கு கஜேந்திரனின் தாயாருக்கு பவர் பத்திரம் எழுதிவைத்து விட்டு சென்றுவிட்டார் என்றும் அன்றைய தினம் 5 ம் மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாததால் கடந்த 23.06.2022 ம் தேதியன்று நீதிமன்றத்தில் முன்னிலையாகததால், மனுதாரர்களை தோன்றாத்தரப்பினராக முடிவு செய்து உத்தரவிடப்பட்டுள்ளது என்று மனுதாரர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தற்போது மனுதாரர்கள் மீண்டும் வழக்கில் ஒருதலைப்பட்ச உத்தரவை நீக்கக்கோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள். எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபணை தெரிவித்துள்ள போதும், மனுதாரர்களுக்கு அவர்களது தரப்பு கட்சியை நிரூபணம் செய்வதற்கு ஒரு வாய்ப்பு அளிக்கவேண்டும் என்பதாலும், நீதியின் நலன் கருதி இம்மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு

செய்கிறது.

**முடிவில்,**மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/தீர்ப்புக்கடனாளிகள்,எதிர்மனுதாரர்/ மனுதாரர்/ தீர்ப்பாணை பெற்றவர், செலவுத் தொகையாக ரூ. 500/-ஐ எதிர்வரும் 24.04.2024 ம் தேதிக்குள் செலுத்தி வைக்கவேண்டும் என்று இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு எனனால் சொல்லப்பட்டு சுருக்கெழுத்தரால் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று (12.04.2024 அவையறியப் பகரப்பட்டது.

(S/d. A.Seethalakshmi ),
மாவட்ட உரிமையியல் நீதிபதி
மன்னார்குடி. (மு.கூ.பொ)

**<u>குறியிடப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u>**

**இருதரப்பிலும்** : இல்லை

(S/d. A.Seethalakshmi)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
மன்னார்குடி. (மு.கூ.பொ)